தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.43/மா/2022**

**நாள். 25.05.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை – 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–05,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவரின் 28.03.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.03.2022 அன்று பெறப்பட்டு 43/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 28.03.2022 நாளிட்ட தனது மனுவில்,

" சென்னை மாவட்டம், சவுகார் பேட்டை, பூங்கா நகர், தங்கசாலை தெரு, மண்டலம்–05, டிவிசன் 59, கதவு எண். 403/197, என்ற இடத்தில் (அருள்மிகு ஏகாம்பரஷ்வேர் திருக்கோவில் அருகில்) திரு.P.பிப்பின் குமார் என்பவரால் உள்ளாட்சி அமைப்புகளிடம் முறையாக எந்தவிதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் மூன்று மாடி வணிக கட்டிடம் கட்டப்பட்டு தற்போது முழுவதும் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் அமைந்த சாலையான தங்கசாலை சென்னை பெருநகர் இரண்டாம் வளர்ச்சி திட்டம் 2026–ன்படி 18m சாலையாக மாற்றம் செய்யப்பட வேண்டிய சாலையாகும் அதற்காக தேவைப்படும் நிலங்கள், வளர்ச்சிதொகை ஆகியவை கட்டிட அனுமதி அளிக்கும்போது உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டும். இவற்றை கண்காணிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தவறி விட்டதால், மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டதுடன், மேற்கண்ட வளர்ச்சி திட்டம் முறையாக நடைமுறைப்படுத்த பெரும் இடைஞ்சலாக உள்ளது. மேலும் இந்த அனுமதியற்ற கட்டிடம் கட்டப்பட்ட நிலம் அருள்மிகு ஏகாம்பரஷ்வேர் திருக்கோவிலுக்கு சொந்தமான நிலமாகும்.

அவற்றை அபகரிக்கும் நோக்கத்துடனே இவ்வாறு அனுமதி பெறாமல் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பல முறை சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் அளிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும், அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு பெற்றவர் என்பதால் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் அவருடன் சேர்ந்துக்கொண்டு புகார்களுக்கு தவறான தகவல்கள் அளிப்பது, எந்த நடவடிக்கைகளும் எடுக்காமலே எடுத்ததாக கூறுவது போன்றவற்றை செய்து மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் மற்றும் அதன் உரிமையாளர் ஆகியோரை காப்பாற்றி வருவதோடு, தங்கள் கடமைக்கும் துரோகம் செய்கின்றனர். எனவே இந்த புகார் மனுவினை தீர விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு மண்டல அலுவலர், மண்டலம்–05 அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 20.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்–05 அவர்களிடமிருந்து அறிக்கை எதுவும் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்படவில்லை.

3) மனுதாரர் திரு. B. விஜயகுமார் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–05 ஆகியோர் 11.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 11.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

4) மனுதாரர் 18.05.2022 அன்றைய நேரடி விசாரயையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" சென்னை சவுகார்பேட்டை, பூங்கா நகர், தங்கசாலை கதவு எண்.403/197 என்ற இடத்தில் (அருள்மிகு ஏகாம்பரஷ்வேர் திருக்கோவில் அருகில்) திரு. பிப்பின்குமார் என்பவரால், உள்ளாட்சி அமைப்பிடம் முறையாக அனுமதி பெறாமல் மூன்று மாடி வணிக கட்டடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இது தொடர்பாக மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும்,மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் மீது நடவடிக்கை எடுத்திடவும், தவறுக்கு உடந்தையாக செயல்படும் மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –05ஐ சேர்ந்த உதவிப்பொறியாளர் 18.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரர் திரு. விஜயகுமார் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை சவுகார்பேட்டை பூங்கா நகர், தங்கசாலை, கதவு எண். 403/197 என்ற இடத்தில் திரு.பிப்பின்குமார் என்பவர் திட்ட அனுமதி (PPA/WDC No. 3/01826/14) பெற்று, விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு Stop work Notice 12.12.2014 அன்றும், Lock & Seal and Demolition Notice 16.07.2021 அன்றும், மேலும், De-occupation Notice 26.03.2022 அன்றும், வணிக வளாக உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். De-occupation Notice க்கு அடுத்தகட்ட நடவடிக்கையாக வளாகத்தில் உள்ளவர்களை காவல்துறையினரின் உதவியுடன் வெளியேற்றி மேற்கண்ட வணிக வளாகத்திற்கு பூட்டி சீலிடப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட திட்ட அனுமதியின் (PPA/WDC No.3/01826/14) நகல் மற்றும் Stop work Notice

நாள்.12.12.2014 ஆகியவற்றின் நகல்களை இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட திட்ட அனுமதியின் (PPA/WDC No.3/01826/14) நகல் மற்றும் Stop work Notice நாள்.12.12.2014ன் நகலினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 05–ஐ சேர்ந்த உதவி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

இந்நேர்வில் மனுதாரர் சென்னை சவுகார்பேட்டை, பூங்கா நகர், தங்கசாலை கதவு எண்.403/197 என்ற இடத்தில் (அருள்மிகு ஏகாம்பரஷ்வேர் திருக்கோவில் அருகில்) திரு. பிப்பின்குமார் என்பவரால், உள்ளாட்சி அமைப்பிடம் முறையாக அனுமதி பெறாமல் மூன்று மாடி வணிக கட்டடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இது தொடர்பாக மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பியும்,மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை சவுகார்பேட்டை பூங்கா நகர், தங்கசாலை, கதவு எண். 403/197 என்ற இடத்தில் திரு.பிப்பின்குமார் என்பவர் திட்ட அனுமதி (PPA/WDC No. 3/01826/14) பெற்று, விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு Stop work Notice 12.12.2014 அன்றும், Lock Seal and Demolition Notice. 16.07.2021 அன்றும், மேலும், De-occupation Notice 26.03.2022 அன்றும், வணிக வளாக உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதை மண்டலம்–05ஐச் சேர்ந்த உதவி பொறியாளர் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. 12.12.2014 அன்று Stop work notice வழங்கப்பட்டதற்கு பிறகு Lock and Seal and Demolition Notice 16.07.2021–ல் வழங்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஏறத்தாழ 7 ஆண்டுகள் கடந்து அடுத்த கட்ட நடவடிக்கை மண்டலம் –05ஐச் சேர்ந்த அலுவலர்களால் எடுக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய மாநகராட்சி அலுவலர்கள்அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி வந்ததும், அதை கண்டும் காணாமல் இருந்துள்ளதும் மிகவும் கண்டிக்கத்தக்கது. மாநகராட்சி அலுவலர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் இருப்பது இந்நிகழ்வில் கண்கூடாக தெரிகிறது. இதனை மேலுள்ள அலுவலர்கள் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருப்பது தனக்கு கீழுள்ள அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், ஆய்வு கூட்டங்கள் மூலம் கண்காணிக்க தவறியதும் இதன் மூலம் தெளிவாகிறது. மண்டலத்தில் நடக்கக் கூடிய நிகழ்வுகளை மண்டல அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது உரிய ஆய்வு செய்து இருந்தால் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கும். இதற்கு தார்மீக பொறுப்பு அந்தந்த மண்டல அலுவலருக்கு உள்ளது. ஆகவே உரிய முறையில் கள ஆய்வு செய்து அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இதுபோன்று புகார்கள் வரவாய்ப்பில்லை என்பது நிதர்சனமான உண்மை. எனவே இனி வரும் காலங்களில் மண்டல அலுவலர்கள், ஆக்கிரமிப்புகள் தொடர்பான ஆய்வு கூட்டங்களையும், கள ஆய்வும் செய்து இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாதிருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. எனவே இந்நிகழ்வில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் தொடர் நடவடிக்கையாக அனுமதியற்ற கட்டிடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டலம் –05ன் மண்டல அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

The forum orders disciplinary action against the field officials and the Zonal Officers (Assistant Commissioners) past and present who did not pursue action on the dot of time

according to the periods prescribed after the issue of initial stop work notice dated 12.12.2014. The indifference, apathy and deliberate inaction of the field officials deserves the severest condemnation.

The Commissioner, Greater Chennai Corporation is requested to get this activity reviewed regularly at the Corporation Head Office level so that the Assistant Commissioners, Zonal Officers and the Engineering Officials concerned discharge their functions scrupulously in the issue of constructions without proper planning clearances and the resultant violations.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 25 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத்தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
61, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக